உ

கணபதிதுணை.

சிவகிரிவெண்பா.

திரிசிரபுரத்தைச் சார்ந்த

பேரையூரிலிருக்கும்

ம-௱-௱-ஸ்ரீ:

அப்பாசாமி ஐயர்

கேட்டுக்கொண்டபடி,

ஷ திரிசிரபுரத்தைச் சார்ந்த

சங்கரை யூரிலிருக்கும்

ம-௱-௱-ஸ்ரீ,

குழந்தைக்களத்தில் வென்றார்

இயற்றியது.

சென்னை-சூளை.

த. கோவிந்தாச்சாரியாரவர்களது,

சிவாநந்தநிலய அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விஷு௵

சாத்துகவி.

சென்னை - புரசைபாக்கம்

ம-ா-ா-ஸ்ரீ, அஷ்டாவதானம்

சபாபதிமுதலியார் அவர்கள்

இயற்றிய

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

புரசங்கரையூர்ச் சிதத்தோ டென்னப்
புரந்தபுலவன் சுரா பொருட்டல்
விரசங்கரையூர்மயின் மேலாய்
வென்றேன் மகிழத் தன்சரித
பிரசங்கரையூர்த் தமுகமுறப்
பெருத்து சிவகிரிக்கு வெண்பா
வரசங்கரையூர்க் குழந்தையெனுங்
களத்தில்வென்றான் வனைந்தனனே.

இவை,

ம-ா-ா-ஸ்ரீ,

பாரிப்பாக்கம்

முனியப்பமுதலியார்,

அவர்களியற்றிய

கட்டளைக் கலித்துறை.

பொங்கரவம்புனை சங்கரனார்க்குப் புனிதமறை
யங்கடுணர்த்துஞ் சிவகிரிநாத னடியிணைக்கீழ்த்
துங்கமிகுந்த வெண்பாமாலை சூட்டினன்றேமறுசீர்ச்
சங்கரையூர்க் குழந்தைக்களத்தில்வென்ற சற்குணனே.

இராமநாதபுரம்

சேதுபதிசமுகத்திற்சிறந்த

வித்வான்களிலுயர்ந்த

ம-ள-ள-ஸ்ரீ, சோடஸ அவதானம்

வேலாயுதக்கவிராயர் இயற்றியசெய்யுள்.

பாவாணர்புகழ் குழந்தைகழத்தில் வென்றான்
சிவகிரிவெண்பாச் சிலேடை
நாவாறச்சொன்னான் அனந்தனிக்கவியோற்
சொல்வருமோ நமக்கென்றெண்ணி
மேவாரின்றான் பிலத்திற்கும்பன் மலைவாயிருந்தான்
வெற்பில் மேவும்
கோவாரணக்கொடியான்யிவனூரு
புலவனெனக்(கூறினானே.

ஷை சமஸ்தானம்

சோடசா அவதானம்,

ம-ள-ள-ஸ்ரீ, சரவணப்பெருமாள் கவிராயர்

இயற்றிய செய்யுள்.

பையிலேயிருக்குநிதி பரப்புலவோர்க்
கனுதினமும் பரிந்துனல்கி
கையிலேசிவப்பேந்தும் சங்கரையூர்
ரூண்குழந்தை களத்தில்வென்றான்
நெய்யிலேகைபோட்டு மாவிதற்குனே
ரில்லைநிலத்தென் றோத
மையிலேழுழுகுமுடி சிவகிரிவெண்பா
நண்பாவழுத்தி னானே.

உ

சிவமயம்.

சிவகிரிவெண்பா.

அவையடக்கம்.

வையகத்திற் பாமகட்கே வாளறைக்கி ஆரியமும்
செய்யதமிழ் வோதத் தெருட்டல்போல் கொய்யனுரை
கொள்ளாரெனினும் குகன்சிலம்பேர் கூறுதலால்
தள்ளார் அறிவுடையார் தாம்.

விக்கினேஸ்வரர் துதி.

சீராரும் செவ்வேட் சிவகிரிவெண்பாமாலை
பேராரும் வற்னனையாய்ப் பேசவே—நேராறும்
கந்தமதத்தந்திமுகன் கந்தெரிகாற்றுந்துசெவி
கந்தர்பதம் சிந்தைசெயக்கா.

பூமலியும் சத்தப்பொழிப்புரையும் பூங்கடப்பத்
தேமலிதோள் நிற்கும் சிவகிரியே—நாமலியும்
சீருன்களபச் சிறுமான் சிறுமியர்பாற்
சீருன் அறுமுகவன்சேர்வு. (௧)

கானியலும் மாதரகக்கட்பொரியும் நீத்தார்கட்
டேனியலும் நோக்காசிவகிரியே—தேனியலும்
மாவடப்பமாலையான் வஞ்சரகம்சேராத
மாகடப்ப மாலையான் வாழ்வு. (௨)

மானியலும் பார்வை வளைகரமும் பற்றறுத்தோர்
தேனிகர்தானஞ்சேர் சிவகிரியே—கோனியலாய்
கோங்கரும்பை யெய்க்கும் குறவள்ளிக் கொம்மைபெற
வேங்கைமரமாயினன் வெற்பு. (௩)

வித்தகஞ்சேர் பூமகட்கு மேவும்தனமாக
சித்தகிரியாஞ் சிவகிரியே—மொய்த்தசுரர்
மாமரமாய்நின்றானை மார்புருவத் தூளிபட
சேமகரவே லெறிந்தான்சேர்வு. (௪)

சாம்புனதம் ஒன்பன்மணி தாங்கும் புவிமகட்குத்
தேம்புமுடியாம் சிவகிரியே—காம்புருதோள்
கட்குழல்சேர் யானைதனக்கன் புருணன்மார்புடையான்
தெட்குழல்சேர்மால் மருகன்சேர்வு. (௫)

பார்த்துயர்ந்த பன்னிரண்டும் பண்புருகம்மாரும்
சேர்த்தோன நசையாம்சிவகிரியே—எத்தமுடன்
ஆரக்கரத்துகந்தார் ஆயிரமாஞ்சோதியென
சீர்வேற்கரத்துகந்தார் சேர்வு. (௬)

வேடர்பரணேரும் விசைகேட்டுடுப்ரணி
சேடமருண் டேங்கும் சிவகிரியே—கோடமரும்
சோலைபுனநெல்விளைக்கத் தூம அகிற்காட்டெரிசேர்
வேலையினன்வந்துதித்தான் வெற்ப்பு. (௭)

மாணும்குரவர் மகளூசலூநதுதொறும்
சேணுத்திரஞ்சேர் சிவகிரியே—பாணர்குழாம்
கின்னரம்பைமீட்டுமிசை கேட்டுமகிழ் புரியும்
தென்னர்பிறான் தன்குழகன்சேர்வு. (௮)

மண்கார்த்திகை கிளங்கை மர்க்கடந்தாவென்னலுமே
திண்ணாரல் தேங்கும் சிவகிரியே—விண்ணாடர்
தாமிடுக்கண்டீர்த்துத் தனிக்கோபதியளித்த
சேமகரபூமருகன் சேர்வு. (௯)

கங்கைதருந்திவலை கானயார் ருந்துதொறும்
செங்கதிர்தேயாகும் சிவகிரியே—தண்கதிர்சேர்
முத்தமணிச் சிற்றிலிடை மூசக்குறமகளை
சித்தமுறசேர்ந்தணைவான் சேர்வு. (௰)

கர்ப்பாந்தகாலமெலாம் கண்டசலமாயிருந்து
சிற்பாந்தம் சேராசிவகிரியே—பொற்பார்ந்த
மேருமுடிசார்ந்த விதமேபொருந்தி காவடியாய்
சாருமுடிவெற்புறைவான் சார்பு. (௰௧)

ஐந்தெழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தையந்தரங்க
சிந்தைசெயத்தேறும் சிவகிரியே—அந்தணனை
வேதப்பொருட்கு விரிந்தவுரைவிள்ளாதால்
சேதச்சிறையிலிட்டான் சேர்வு. (௰௨)

தக்கோலம் கோட்டம்சரியிடைக்கி முத்தமிடும்
திக்கோலம்சேரும் சிவகிரியே—மிக்கானம்
வேயிசைகேட்டுள்ளம் வியந்துபவனிவரும்
சேயிசைகேட்டந்தரங்கள் சேர்வு. (௰௩)

சந்துத்தலைகணையும் சாறுலக்கைவேலிபுடை
சிந்துரத்தந்தம்சேர் சிவகிரியே—விந்தைபெற
சிற்றூராளக்கும் செறுக்காலும் நாழிமுடி
வித்தூர் புயமுருகு வெற்ப்பு. (௰௪)

தங்குதலைவிரித்து தங்குலைசாய்க் குங்கனியிற்
றெங்கின்கனிசேர் சிவகிரியே—பைங்குவளை
வாளைஉழக்கி மதுப்பெருக்கும் வானதியின்
வேளமரும்சாலிவிளை வெற்ப்பு. (௰௫)

முத்தங்குராமலர்க்கு முன்னளக்குங் கொவ்வைமின்னார்
சித்தம்விளை சிற்றூர்சிவகிரியே—கொத்தலர்த்தேன்
தண்ணேரிச் சாலிதழைத்து தலைசிறந்து
விண்ணேறும் திண்குமரன் வெற்ப்பு. (௰௬)

கிள்ளைகடிகைக்கவணிற் கெம்புக்கல்வைத்து
தெள்ளிதமாய் ஓச்சும் சிவகிரியே—வள்ளிபத்தன்
மாமயிலைக்கண்டறவ மாழ்கிவளையிற் கிடக்கும்
சேமயிலான் ஆண்மைதரும் சேர்வு. (௰௭)

வேழம்பிடிக்குதவ வேண்டியிரா லடையை
சேழமறப்பற்றும் சிவகிரியே—வாழசுரர்
தங்குலத்தை வேரறுத்தான் தாழ்விலாதேசுரற்க்கு
தங்கழல்தந் தாதரித்தான் சார்வு. (௰அ)

பாற்றேன் அக்காரம் பழவகைபஞ்சாமிருதம்
சேர்த்தபிஷேகம்செய் சிவகிரியே—நாததழும்பா
போற்றினர்க்குசெல்வம் புகழ்வனப்பா யுள்மற்றும்
தேர்ச்சிபெற தந்தருள்வான் சேர்வு. (௰௯)

வாதபித்த சிலேத்துமமும் வாருப்பிணியணுகா
சேதமுறுநன்மை சிவகிரியே—மாதவர்கள்
பெத்திக்கும் சூழும் யெரிந்ததிரைக்கடன்மா
பற்றிக்கருவறுத்தான் பண்பு. (உ௰)

தத்தையர்கள் கைக்கவணில் தான்வயிரகல்லைவத்து
தெத்திபெற ஒச்சும் சிவகிரியே—சத்தியற்கு
வாக்குமனம் தந்தான் மறுபிறவிவாருமல்
சேர்க்குமனம் தந்தான்றன் சேர்வு. (உக)

தத்துமுடம் குட்டம் தளர்குருடு கூன்செவிடு
சித்தபிற்மைதீற்கும் சிவகிரியே—யெத்தலமும்
காவடிகொண்டேவருவார் கானடனம் மாடிடுவார்
சேவடிவேற்றிண்குமரன் சேர்வு. (உஉ)

அஞ்சுகங்கள்பேசும் அருமுகவன் சீர்த்தியினை
செஞ்சொற்கலைதேர் சிவகிரியே—பஞ்சரத்துட்
டேம்பழம்பால் நெய்யும் செறிசற்கரைநுகர்ந்து
தேம்புமொழிக்குகன்தான் சேர்வு. (உஙு)

அம்புலியின்மானை அடர்த்துபசிதணிக்க
செம்புலிசேர்சிந்தை சிவகிரியே—வம்பவிளும்
கூந்தலார்மாதிருவற் கோகனகக் கொம்மையினை
சேர்ந்தவானந்தத்தான் சேர்வு. (உச)

வட்டம்சேர்மாமதியை வாழுமுயற் கூடெனவே
திட்டம்செய்தேரும் சிவகிரியே—கிட்டுதற்கு
பற்றிலர்பாற்சேராதான் பற்றுளர்பாற்பேருதான்
செற்றமிலா நற்குமரன் சேர்வு. (உரு)

காரதிற்ச்சியைக்கேட்டு கட்கயமென்றங்காக்கும்
சேர்பகுவாய்பாந்தட் சிவகிரியே—நேர்வதற்கு
கிட்டுவர்பொன்மேனிகிளர் பன்னிருகரத்தோன்
செட்டியெனும் பேருடையான் சேர்வு. (உகூ)

திங்கட்குடையாம் செழுங்காம்புகைபிடியாம்
செங்கதிர்அங்கோரா சிவகிரியே—மங்குரவள்
தந்திவலைபன்னீர் சார்க்குங்குமக்குளம்பே
தந்திருக்கைவேலான்தன் சார்பு. (உஎ)

செங்கதிரின்செல்வனுக்கு சேராம்பைசாமரையாம்
செங்கமலம்காள்கம் சிவகிரியே—எங்குமிசை
அட்டாதசமேளம் அங்கொலி பஞ்சாக்கருவி
நட்டார் நிரந்தரம் சேநட்பு. (உஅ)

சக்கரை தேன்பாலு முயர்சத்தகங்கை குக்குடமும்
செக்கரிளநீரும் சிவகிரியே—மிக்கவர்கள்
தங்காவடியேற்ப்பான சாறும்வைகாபுரியான்
தங்காவடிகாப்பான் சார்பு. (உகூ)

ஆறுமுகம் ஆறழகும் ஆருறுதோளழகும்
தேரின்யுகம் தேருசிவகிரியே—போரில்முகம்
முன்வைத்தான் உஞ்சகிரி முற்றுதிற நீருக
வென்வைத்தான் வேற்றிருக்கை வெற்ப்பு. (௩0)

கார்த்திகையின் பால்நுகர்ந்து கஞ்சச்சறவணையில்
சேர்த்துவிளைசெல்வச் சிவகிரியே—ஏத்துபரன்
அண்டமெலாம் யீன்றருள்சேர் அங்கரித்தாய்கண் களிகூர்
தெண்டாயுதக்குமரன் சேர்வு. (௩க)

கொண்டாடும் தெய்வக்குழுவையெல்லாம் இவ்வுகத்திற்
திண்டாடச்செய்யும் சிவகிரியே—கண்டவர்கள்
தானுகசன்னதமுற்று ஞகமேவிவரும்
தானுகசன்னிதிவேற் சார்பு. (௩உ)

வாட்டமுறும் வெம்புலிநேர்வானத்தவிர்மதிமான்
தேட்டமுறசிந்தை சிவகிரியே—நாட்டமறர்
மலைத்தேனை யியந்துவரும்அமுதை வாங்கும்
குலத்தேன் குறவர்க்குக்குன்று. (௩௩)

சந்திரைகைவீச தனிகும்பம் வாய்நிறைய
தெம்புஜலமூறும் சிவகிரியே—வெம்புலிமான்
தாகசமனம்செய்து தாண்டிக்குதிகுலிக்கும்
தேகசித்திசெய்குமரன் சேர்வு. (௩௪)

விண்ணுடதனில் விளங்குமரிமேடமதை
திண்ணுடரியாம் சிவகிரியே—பண்ணுடர்
போற்றுமிசையேளுள்ளான் பூவைப்பொழில்சூழும்
சாற்றும்மிசையேளுள்ளான் சார்பு. (௩௫)

கைமலைமாக்கூட்டமதைகண்டு பசிதணிக்கத்
தெய்மலைமாத்தேடும் சிவகிரியே—பொய்மலைமா
தந்தரங்கம்சேராதகத்தியற்கு ஞானமொழி
செந்தமிழை தந்தான்றன் சேர்வு. (௩௬)

மார்ச்சாலம் கண்டுமகிழ்ந்து கடைவாயைநக்கும்
தேர்ச்சாலும் மீனை சிவகிரியே—மேற்சாலும்
யோகநிலைகண்டார்க்குதவும் திருப்பதசைய்
யோகநிலைவைத்தவந்தன்வூர். (௩௭)

கைதைநனைசோரளிக்க காந்தளம் பூகையேந்தும்
சேய்தண்பொழில்சூழ் சிவகிரியே—மெய்தவறு
நாரதன்யாகத்தில் நயந்தளித்சமாத்தகனைச்
சேர்த்ததில் ஆரோகணித்தான்சேர்வு. (௩௮)

வெப்பனழிக்கும் வெறுக்கைவரிசையெலாம்
சிற்பறனாய் யேற்கும் சிவகிரியே—அற்புதமாம்
பணிப்பகையை உளர்தியாய் பாங்கமற பெற்றான்
திணிப்பகையை செற்றறுத்தான் சேர்வு. (௩௯)

வான்வளைக்குமிந்திரவில் வாய்ப்பக்கரம்பொருநதி
தேன்வளைக் காம்பம்பாம் சிவகிரியே—நான்கமரும்
அந்தக்கரணம் அசையாதொருங்குபெற
சிந்தைநிலைவைத் தவந்தன்சேர்வு. (௪௰)

சாரங்கந்தன்னை சார்ந்தபசி மாளரிதின்
சீறங்கம்தாவும் சிவகிரியே—ஏர்வளைமான்
வெற்றியணிதோள்க்கு விருப்ப முற்றுகூந்தலவிழ்
தெட்சிதரும் காங்கேயன்சேர்வு. (௪௧)

ஏறதனைக்கண்டுலவும் மேகிரிமாவாயங்காந்
தேர்மனதாய்ச் செல்லும் சிவகிரியே—மீறுவினை
போக்குவித்தான் என்னுட்புகுந்தான் அவனுக
தேக்குவித்தான் திண்சிலம்பன் சேர்வு. (௪௨)

முத்தமிளக தற்காய்முன்னோர் துலாத்தில்வைத்து
தெற்றிநிறுக்கும் சிவகிரியே—பைத்தவல்குற்
பாம்பின்பணமாம் பருத்ததிகிரித்தனமாம்
தேம்புமொழி வாயார்தன் சேர்வு. (௪௩)

ஆசானைகாண்பதற்கு அங்குவரும்மாதர்களை
தேசுசிறைவைக்கும் சிவகிரியே—நேசமதாய்
சுத்திகுகையில் துகிற்போன்ற வாயர்கள்
சித்தமயலாயிருப்பார் சேர்வு. (சுசு)

கொம்புரையும்தேமாங் குயிலிசைக்கேட்டாழ் வல்லோா
தெம்புமிடர் அஞ்சும்சிலகிரியெ—நம்புமெனை
ஆண்டாதரித்தான அமரூவதிநகரை
மிண்டாதா ரித்தான்றன் வெற்பு. (சுரு)

ஆடல்புரி இந்திறதனு அண்டஉடுஉள்ளடையதையாய்
தேடல்புரி தேவர்சிவகிரியே—கோடல்புரி
பண்டடர்த்தசெய்திதனை பார்ப்பான் அடிபரவ
மிண்டெடுத்தான் பண்டையதாய் வெற்பு (சுசு)

முத்தனேயேவில்லாய் முகுளரும்பேபாணமதாய்
சித்தசனையெய்க்கும் சிவகிரியேஎத்திசையும்
வேதனையைதீரப்பான் விபுதர்பதிக்குவந்து
சேதனையை தீர்ப்பான்தன் சேர்வு. (சுஎ)

கொஞ்சும் கிளிமொழிநற் கோவ்வசெவ்வாயாள்பாற்
செஞ்சொன்மொழியெர்க்கும் சிவகிரியே—தஞ்சமென்பார்
தன்வினையை வேறறுப்பான் சாற்றும்துதிக்குவப்பான்
தென்னர்பிரான் தன்குமரன் சேர்வு. (சுஅ)

காலங்கோடாவடிவேற் கையான்றனைநேர்ந்து
சீலமரிபூசைச் சிவகிரியே—கோலஞ்செய்
முத்தமணிசிற்றூரின் முன்றிலிடைமேவும்
சித்தமபதம சிவப்பான் சேர்வு. (சுகூ)

காலையிழுத்தோங்கும் கருவழிக்குவங்கமெனும்
சீலேதிறைநீக்கும் சிவகிரியே—கோலமதன்
வில்லம்பு மேற்பொருதாமேவும் அடியவர்க்கு
செல்வம் பதந்தருவான் சேர்வு. (நுய)

சிலேடை.

கங்கையரவம் கலந்தருகு மேற்கொளலால்
திங்கள்பிறைசேரும் சிவகிரியே—மங்களஞ்சேர்

பொங்கரவக்கங்கணத்தான் போலுமயில்வாகனத்தான்
சங்கரியாள் நற்புதல்வன் சார்பு. (ருக)

பொன்னும்மணியும் புனைக்குங்குமக்களபச்
சின்னனந்துசேறுஞ் சிவகிரியே—மின்னுமஞளி
பிதாம்பரத்துளவோன் பேறுருவுமாமயிலான்
சேதாம்பரான்டலையான் சேர்வு. (ருஉ)

கஞ்சங்கலைகவியும் கான்மானதத்தடமும்
செஞ்சாநதனஞ்சேர் சிவகிரியே—நெஞ்சாரும்
ஆரணனேபோலும் அறுமாமுகத்தனருட்
சிரணனோர் செஞ்சடையான் சேர்வு. (ருந)

பாய்மாச்சி உம்பல்பாலானும் நீகம
சேய்வச்சிரம்சேர் சிவகிரியே—தோய்மதர்கட்
டாயிரனேபோலும் அறிவேற்க் கறந்தாங்கும்
சேயரக்கர் நெஞ்சுருத்தான் சேர்வு. (ருச)

காசும்பணமும் கலத்தலால் காசினியோர்
தேசுபெறப்போற்றும் சிவகிரியே—நேசமதாய்
வாணிபரேபோலும் வனப்புடையான் சீரருள்கூர்
சேணிபமா மாதணைவான் சேர்வு. (ருரு)

ஆறமுதும் ஐந்தருவும் ஆரந்து அரம்பையர்கள்
சேரனடமாடும் சிவகிரியே—சீறமருள்
சங்கநிதி பத்மநிதி சாரும் அமராவதியாம்
செங்கையில் வேலாயுதத்தான் சேர்வு. (ருசா)

வென்மய்மாமோட்ச பதமேவுதலால் தன்னளியோர்
ஜின்மயத்தார் நோக்கும் சிவகிரியே—நுண்மையருள்
கைலாயம் போலும் எழிற்காங்கேயன் விண்ணோர்
வெயிலான்விருப்புடைய வெற்பு. (ருஎ)

ஆன்பாலும்வெண்ணெய் அளைதலால் ஆயர்குழாம்
தேன்வேய்ங்குழல்சேர் சிவகிரியே—கான்மருவும்
துவாரகையேபோலும் துதித்தோர்க்கருள்புரியும்
திவாகரனோர் வேற்படையான் சேர்வு. (ருஅ)

விண்ணோக்கிருமாந்து மேலுமுயிர்ப்பசையா
தெண்ணியோகர் ஆகும் சிவகிரியே—தண்ணார்

கலன்கடந்தனத்தற்க்கரி அசுரர்முன்னீர்ச்
சலங்கடந்தவேற்படையான் சார்பு. (௫௯)

பற்றம்பலவியாக்ர பாதர்பதஞ்சலிசேர்
சிற்றம்பலமாம் சிவகிரியே—விழ்றழும்பு
பற்குனன்பால் யேற்றுன்பறிந்தமகவாய்
சிற்குமரன் சொற்குசிதன் சேர்வு (௬௰)

வேண்டாமனைமேல் விளங்கலால் வேதானுச்
செண்டேர்பிராமிச் சிவகிரியே—தொண்டர்குழாம்
சண்முகதீர்த்தக்கரையிற் தாங்குமுடிசெலுத்தும்
சண்முகஞ்சேர் அண்டர்பிரான் சார்பு. (௬௧)

காசிஉயர்கங்கைதறு காவடியைகண்சிறக்க
தேசுபெறயேற்கும் சிவகிரியே—ஈசனருள்
அம்பறத்தார்போற்ற அனற்பொரியாய் வந்துதித்த
தெம்பரத்தார் சிந்தையுளான் சேர்வு. (௬௨)

பெத்தம்புழையும் பெருங்காற்றும் நீள்கரமும்
சித்தைங்கரனும் சிவகிரியே—முத்தர்தொழும்
காலாயுதக்கொடியும் கண்ணிருநான்கர்ர்ந்தசுடர்
வேலாயுதகரத்தான் வெற்பு. (௬௩)

கோகனகம்பொருந்தி கோபாலன் மேலுரலால்
தேகமிந்திரைசேறும் சிவகிரியே—நாகரிக
பாந்தள்உளுவை பல்குரிஞ்பன் விரும்பும்
சேந்தன் அரியடர்த்தான்சேர்வு. (௬௪)

தாளிநிறைந்து தருங்கொன்றை மேல்உரலால்
சேண்தழுவுமுல்லை சிவகிரியே—காளமுறும்
பாந்தள்வாய்தூக்கி பருமணிகள் கிந்தவெரி
சேந்தனமர் மாமயிலான் சேர்வு. (௬௫)

காட்டெரியைமேவி கடிசாம்பல்மேலுறலால்
தேட்டுறவும்பாலை சிவகிரியே—நாட்டமுறும்
தாரகையை மேல்வாவிச் சார்ந்துபொரிகொரிப்ப
சீர்குக்குட்கொடியான் சேர்வு. (௬௬)

கூர்மம்தடாகசலம் கொண்டுனொந்து மேலுரலால்
தேர்ந்தமருதம் சிவகிரியே—ஆர்ந்தகதிற்

சந்திரிகைவீச சகோரம்ம்ருதநுந்தும்
செந்திருகற் சேவடிவேற் சேர்வு. (௬௭)

பையுள்கடுவுணர்ந்து பால்நத்துமேலூரலால்
செய்யவனசேர்நேய்தற்ச் சிவகிரியே—கைவளாசேர்
போதகத்தை மெய்வருத்தி போழ்ந்துபுகழ்புரிந்து
பாதகத்தை வேற்றுத்தான் பற்று. (௬௮)

ஈரேழுலகம் இசைக்கும் துதிபுரிந்து
சீர்கேழ்க்கும்செல்வ சிவகிரியே—பாரேழும்
அண்டமுகடும் அதுக்கப்பாலும் எண்டிசையும்
சென்றுலவும் கேகையத்தான்சேர்வு. (௬௯)

பார்த்தகுடத்தெனமபை பதுமினி பெண்ணுசவரச
சேர்த்தருளும்செல்வ சிவகிரியே—நேர்த்தவர்கள்
அக்காரம்மாய் மணலேஆகச்செய் அற்புதமே
மிக்கார்துதிக்கவக்கும் வெற்பு. (௭0)

போற்றுமடியவர்கள் பொன்னுவருத்துவைக்க
தேற்றிவளர்க்கும் சிவகிரியே—மாத்தலறை
கூற்றுவனேநெஞ்சையுடைத்து குழந்தைகளே
சேர்த்தாதரிப்பான்தன் சேர்வு. (௭௧)

தோல்முதிரைக்காவடியை தொண்டர்கொடுவந்துநிற்க
தேல்சக்கறையாம் சிவகிரியே—நால்வகையாம்
நூல்வகையைதந்தடியார் நுண்ணேக்கருள் புரிந்த
சேல்வயலான் சேர்ந்தனமர் சேர்வு. (௭௨)

மித்திரர்கள் மச்சமதைவேகவைத்து கொண்டுவற
சித்திரமாய்தான்டும் சிவகிரியே—எத்திசையும்
பூபலரானவர்கள் போற்றபுகள்புரியும்
சேபாலன் சேர்ந்தனமர் சேர்வு. (௭௩)

வீண்ணேரும் மேகமதை மென்பிடியென்றங்கைதொடும்
திண்ணேர்களிரச் சிவகிரியே—பண்ணுரும்
அம்பரத்தார்மாவிரதம் ஆற்ற அருள்புரியும்
தேம்பறத்தார் சோந்தண்ணி சேர்வு. (௭௪)

மாமுனிவர் ஏரவழிப்படியாய் வாளரவம்
தேமுநிறைநேறும் சிவகிரியே—மாமுநிறை

கொஞ்சுதளிர்சூரியனை குஞ்செனவேகொண்டாடும்
மிஞ்சுசுடற்வேற்படையான் வெற்பு. (எரு)

மாண்புகர்மாஉண்டதுளே வாய்நீர்கமண்டலத்தில்
சேண்பெருகப்பெய்யும் சிவகரியே—காண்பரிய
வேணித்தவத்தர் விரும்பக்குசைஉதவும்
வேணித்திற்சுகவான் வெற்பு. (எசு)

சோகிலங்கள்மாமுனிவர் கூருமகாவாக்கியத்தை
சேகறமாய்கற்கும் சிவகரியே—யோகம்வர
முத்தகனேவில்லால்முனியாமல் தேர்ச்சிபெறச்
சித்தனக்குவந்தான் சேர்வு. (எஎ)

மாதவரக்கும்முன்னூல் வழங்கிசிலசிலந்தி
தீதகலநோக்கும் சிவகரியே—சூதவர்க்கு
எட்டாக்கரமாறுன் யெந்தைமுகம்ஆறுனன்
சிட்டர்களின்நெஞ்சுறைவான் சேர்வு. (எஅ)

மந்திவழிகாட்ட வால்பிடித்துமாவிருடி
செந்தடாகம்சேர் சிவகிரியே—பைந்தினையை
யோகப்பயிர்ச்சிசெய்யும் உத்தமர்கள்வாழ்மடத்தில்
சேகரிக்குமஞ்சுகவான் சேர்வு. (எகூ)

நீண்டரவின்சட்டை நிமிர்களைமேன்நின்றுட
சேண்டுவசமாகும் சிவகரியே—வேண்டினர்பால்
மெய்வாய்கண்மூக்கு விளங்கும்செவிப்புலனேய்
செய்யான்அருமுகவன் சேர்வு. (அ௰)

கான்மயில்கள்ஓமக்கதழெரி வாய்காந்திதற
தேம்சிறையால்வீசும் சிவகிரியே—ஊன்சுரவும்
செந்தினைமாவெள்ளிடியை தேனளவிதேக்கிலையில்
சேந்துவர்வாயார்பரவும் சேர்வு. (அக)

வேதனவில்கீதஒலி விண்பருகும்மேகஒலி
சீதவீரிகீர் சிவகிரியே—போதரவாய்
பூவளப்பம்வேண்டி பொருப்புமலிதோளானே
சேவளப்ப அன்னமிடும் சேர்வு. (அஉ)

ஆறுதிருவெழுத்தும் அன்பாய்துதித்தவர்பாற்த்
தேறும்நிறைநிற்கும் சிவகிரியே—நாரதன்வாய்

தேனாறும்வள்ளி சிறப்புடையசீர்கேட்டு
தேனாறுமிழ்மணந்தான் சேர்வு. (அரு)

அண்டர்களும்வானத்தரம்பையரும்அன்றழுத
செண்டிங்லைமாற்றும்சிவகிரியே—பண்டவனை
அஞ்சலெனவெடுத்தான் ஆற்றலறக்கர்வுரத்தை
அஞ்சலெனவேயுருத்தான் ஆர்பு. (அச)

வானார்ந்துமேருவொடும் வாயிகலிச்சேணடைந்த
தேனார்விந்தமலையை சிவகிரியே—மேனாளில்
கூவழுத்திச்செல்லும் குருமுனிக்கு மாமறையை
பாவழுததனுவளித்தான் பற்று. (அரு)

பூவுலகிற்றம்புகழைபோற்று அருணகிரி
தேவலவன்நாவிற் சிவகிரியே—மாவலதாய்
முற்றித்திறுவெனவே முந்திவறைந்துவைத்து
சித்தமகிழ்சீர்கேழ்ப்பான் சேர்வு. (அசு)

காதன்அருணகிரி நாற்பத்தையாயிரமாம்
சீதமறைதேன்பாச் சிவகிரியே—ஓதமகிழ்
அஞ்சமிர்ததாரகமாம் ஆறமிர்ததாரகமாம்
செஞ்சமிர்ததாரகமாம் சேர்வு. (அஎ)

கான்விளைவாய்வள்ளிகுழல் கண்டுவிறைந்தர்தாஞ்செல்
தேனுவைவாள் நோக்கிச் சிவகிரியே—மான்மறுகன்
ஆறுதிருப்படைவீடங்கங்கும் மாமறைவாய்
கூறுதிருப்படையான் குன்று. (அஅ)

வானின்உயிர்த்தபிரை வள்ளினுதற்கண்டேங்கி
செணுலகின்நிற்கும் சிவகிரியே—ஆனுலவு
கானவர்கள்கைக்குருவி கண்டமரிகட்ப்பூசை
மேனிவறவாஞ்சைபெறும் வெற்பு. (அகூ)

காலமறிந்துதவும் கருணைப்பிரவாகவெள்ளம்
சீலமுரததேக்கும் சிவகிரியே—ஞாலமதில்
மேலவனுய்வந்தருளும் விண்ணுடும்தண்குரிஞ்சி
சீலவன்நீர்வேட்கையான் சேர்வு. (கூம)

கோலக்குறமகள்பாற் கொண்டதினைமாங்காந்து
சீலமுரவிக்கும் சிவகிரியே—காலமதில்

கூபநிலைகாட்ட குறவள்ளி கொம்பொசிய
தீபயிபம் சோப்பாந்தன் சேர்வு. (௯௧)

காட்டுமதகரியை கண்டஞ்சி கட்டிநறைச்
சேட்டைவிதம்செய்யு சிவகிரியே—பூட்டுமயல்
வேட்டவர்பால் வேட்டம்செய் வெடர்வறமென்பூவாம்
வேட்டம்புலிமானன் வெற்பு. (௯௨)

சூழறகவர்வழியிற் தொல்ஆனை தப்பிநின்ற
சேழமறுள்கன்றை சிவகிரியே—வேழமது
கையெடுத்துபொற்கவட்டிற் கால்வாய்சுனைப்புறத்தும்
செய்யவைத்துவைத்துளடுக்கும் சேர்வு. (௯௩)

நன்றுமுறக்குழியின் நால்வாயின்கால்வழுக்க
சென்றுதிரிக்கும் சிவகிரியே் நின்றுடும்
கேகயத்தின்முட்டை,தனை கிசகங்கள்பந்தாடும்
மேகயத்தான்எம்பிதிரு வெற்பு. (௯௪)

தாலமுருமாக்கட்சன்னகடல்கடக்க
சிலமுறுகப்பற் சிவகிரியே—பாலகர்க்கு
ஏலுமுடிவைத்து இணங்கன்னதானமும்செய்
மேலுமுடிபெறுவான் வெற்பு. (௯௫)

நாடுங்குரியின் கலம்பறவும்நாரியர்க்கு
தேடுபொருள்காட்டும் சிவகிரியே—வீடழித்து
விண்டாரிகபரத்தை மேவுவர்கள் மேவாதார்
தண்டார்கடம்பணியும் சார்பு. (௯௬)

வேல்தாவும்கண்ணியர்கள் வெண்சாமரைவீச
சேல்தாவும்தெங்கிற் சிவகிரியே பால்வாவும்
வைபாபுரிக்குளத்தான் வானவர்கள்நீருட
செய்யாறும்சென்னல்விளை சேர்வு. (௯௭)

பத்தரொலாம்வல்லிடும் பன்பணைதனில்வந்திரங்கி
சித்தகிரிபூசை சிவகிரியே—மெய்த்தவர்கள்
வாழ்த்துமொலியும வளைஓம்பிசேமக்கலத்தின்
சேர்த்தும்கடல்ஒலியான் சேர்வு. (௯௮)

கையஞ்சும்கற்றோர் கலியையிறிந்தகல
செய்அஞ்சுதேறும் சிவகரியே—பொய்யுடைய

ஆசிரியன்உண்மயக்கை ஆத்திஅமுதளிக்கும்
ஆசிரியன்மேனிலைக்கும் ஆர்வு. (௯௯)

முன்னாள்குகநமசி வாயர்அருணகிரியார்
தென்னாள்நற்கீரர் சிவகிரியேபன்னாளும்
நிஞ்செவிக்குபாவைநிகழ்த் துவர்இன்னாள்அடியேன்
வெஞ்சொற்குவந்தருள்வான் வெற்பு. (௱)

முருகன் றுணை.

முற்றிற்று.